ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2015/53 - 2017 අප්‍රේල් මස 20 වැනි බ්‍රහස්පතින්දා - 2017.04.20

*2015/53 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 20 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும்

**அதிமேதகு சனாதிபதி அவர்களால் செய்யப்படும் கட்டளை**

***(40 ஆம் அத்தியாயம்) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டம்***

(முத்திரை)

மைத்திரிபால சிறிசேன

பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 40) 17 ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிமேதகு சனாதிபதி, மைத்திரிபால சிறிசேன ஆகிய நான், பொதுமக்கள் நலன்கருதி அவ்வாறு செய்வது அவசியமெனக் கருதி, சனசமூகத்தின் வாழ்க்கைக்கு அத்தியாவசியமான சேவைகளைப் பேணும்வகையில் இக்கட்டளையின் பிரகாரம் இத்தோடுள்ள அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள சேவைகளை மேற்குறிப்பிட்ட பிரிவின் நோக்கங்களுக்காக அத்தியாவசிய சேவைகளென இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.

இரண்டாயிரத்துப்பதினேழாம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 20 ஆந் திகதியன்று கொழும்பில் வழங்கப்பட்டது.

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

பி. பீ. அபேகோன்,
சனாதிபதியின் செயலாளர்.

**அட்டவணை**

உள்ளூராட்சிச் சபையொன்றினால் புரியப்படும் அல்லது பேணப்படும் ஏதாவது விபரிப்புகளைக்கொண்ட சகல சேவைகளும், பணியும் அல்லது உழைப்பும் அத்தகைய உள்ளூர் அதிகாரசபையால் அல்லது அதற்காக அல்லது அதன்சார்பில் செய்ய அவசியமான அல்லது செய்யப்படவேண்டியவிடத்து வீதிக்கழிவுகள், வீட்டுக் கழிவுப்பொருட்கள் அல்லது அத்தகைய வேறு ஏதாவது பொருட்களை அப்புறப்படுத்தல், சேகரித்தல், கொண்டு செல்லுதல், தற்காலிக நிலையில் களஞ்சியப்படுத்தல், பதனிடுதல், தனிவேறாக்குதல், தொற்று நீக்கப்படுதல், கைதவிர்ப்பு அல்லது விற்பனை.

1A - G 22802 — 107 (2017/04) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*